## பத்திரிக்கை குறிப்பு

புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருவண்ணாமலை பிரிவு அலுவலகத்தை அணுகி, தான் தன்னுடைய பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய திருவண்ணாமலை மாவட்டம், கருந்துவாம்பாடி கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்ததாகவும், விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கைக்கு அனுப்புவதற்கு திரு.கலைவானன், கிராம நிர்வாக அதிகாரி, கருந்துவாம்பாடி கிராமம், திருவண்ணாமலை தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.5,500/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கேட்பதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நேற்று 24.03.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திரு. கலைவானன், கிராம நிர்வாக அதிகாரி அவர்களின் உத்தரவின் பேரில் திரு.அண்ணாமலை, கிராம உதவியாளர் புகார்தாரரிடமிருந்து ரூ.5,500/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Thiruvannamalai detachment, and gave complaint that he had applied for patta name transfer in his name at Karunthuvampadi Village Administrative Office, Thiruvannamalai Taluk, Thiruvannamalai District, for which Tr.Kalaivanan, Village Administrative Officer, Karunthuvampadi Village, Thiruvannamalai Taluk, Thiruvannamalai District, demanded Rs.5,500/- as bribe for processing his application. In this connection a case was registered and a trap was organized yesterday 24.03.2022.

During trap proceedings, on the instruction of Tr.Kalaivanan, Village Administrative Officer, Tr.Annamalai, Village Assistant received the bribe amount of Rs.5,500/- from the complainant. The both accused were arrested.